## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 24, 2017

**1. பின்வரும் யாருக்கு, 6-வது தேசிய புகைப்பட விருதுகள் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது (LTA) வழங்கப்பட்டது ?**

A. ரகு ராய்
B. கே கே முஸ்தபா
C. அதுல் சௌபே
D. டிபாயன் பார்

**விடை: A. ரகு ராய்**

பழம்பெரும் புகைப்படப் பத்திரிகையாளர் ரகு ராய், அவரின் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் மூலம் 6-வது தேசிய புகைப்பட விருதுகள்-2017 விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது(LTA) பெற்றுள்ளார். இவரின் Raghu Rai's India: Reflections in Colour and Reflections in Black and White புத்தகம் மூலம் நன்கு அறியப்படுகிறார். இவரது புகைப்பட தலைப்புகளில் எம் சுப்புலட்சுமி, பிஸ்மில்லாஹ் கான், மதர் தெரேசா, சத்யஜித் ரே, இந்திரா காந்தி, ராஜ் கபூர் மற்றும் மிருணாள் சென் ஆகியவை அடங்கும். தேசிய புகைப்பட விருதுகள் (NPA) என்பது கலை மற்றும் புகைப்பட நுட்பத்தை மேம்படுத்த மற்றும் நாட்டின் அனைத்து மூலைகளிலும் உள்ள தொழில்முறை மற்றும் தன்னார்வ புகைப்படக்காரர்களை ஊக்குவிக்க தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் (I & B) மூலமாக ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர நிகழ்வாகும்.

**2. பின்வரும் யார், முதலாவது குல்தீப் நாயர் இதழியல் விருது- 2017 வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் ?**

A. ரிஸ்வான் கௌசர்
B. ரவீஷ் குமார்
C. இல்க்சுக்லா அரோரா
D. அனுபம் மிஸ்ரா

**விடை: B. ரவீஷ் குமார்**

என்டிடிவி இந்தியாவின் மூத்த நிர்வாக ஆசிரியர் ரவீஷ் குமார், இதழியல் உலகிற்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் மார்ச் 19, 2017 அன்று புது தில்லியிலுள்ள இந்தியா இன்டர்நேஷனல் மையத்தில் (IIC) அவருக்கு முதலாவது குல்தீப் நாயர் இதழியல் விருது- 2017 வழங்கப்பட்டது. விருதில் ரூ 1 லட்சம் ரொக்கதொகையுடன் சேர்த்து ஒரு தகடும் வழங்கப்படும். குல்தீப் நய்யார் இதழியல் விருது வட்டார ஊடகங்களில் பணிபுரிபவர்களை கௌரவிக்க அமைக்கப்பட்டது, இந்த ஆண்டுமுதல் இனி ஒவ்வொரு ஆண்டும் இது வழங்கப்படும்.

**3. உலகளாவிய ஆற்றல் கட்டிடக்கலை செயல்பாட்டு குறியீட்டில்(Energy Architecture Performance Index) இந்தியாவின் தரம் என்ன ?**

A. 55 வது
B. 65 வது
C. 87 வது
D. 93 வது

**விடை: C. 87 வது**

சமீபத்தில் வெளியிடப்பட்ட 5-வது உலகளாவிய ஆற்றல் கட்டிடக்கலை செயல்பாட்டு குறியீட்டு அறிக்கை 2017-யின் படி, உலகளாவிய ஆற்றல் கட்டிடக்கலை செயல்பாட்டு குறியீட்டில் 127 நாடுகளில் 87-வது நாடாக இந்தியா திகழ்கிறது. பட்டியலில் சுவிச்சர்லாந்து முதலிடத்தில் உள்ளது, அதனை தொடர்ந்து நார்வே, ஸ்வீடன், டென்மார்க் மற்றும் பிரான்ஸ் உள்ளன. உலக பொருளாதார சம்மேளனம்(WEF) EAPI-யை அக்சன்சர்(Accenture) உடன் இணைந்து உருவாக்கியுள்ளது, நாட்டின் ஆற்றல் அமைப்புக்களின் உண்மையான செயல்திறன் மற்றும் போக்காக இது காட்சியளிக்கிறது. 2017 அறிக்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு, சுற்றுச்சூழல் நிலைநிறுத்துதல், ஆற்றல் அணுகல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 18 தரமதிப்பீடுகளுடன் 127 நாடுகளின் திறனளவிடல் கண்டுபிடிப்புகள் அடங்கும். வலிமையை அறிவதற்கான நம்பகமான தரமதிப்பீடுகள் மற்றும் முன்னேற்றத்திற்கான இலக்கு பகுதிகளை வழங்குவதன் மூலம் சமீபத்தில் உள்ள கொள்கை உருவாக்க உதவி மற்றும் உலக எரிசக்தி தரவுகளை EAPI வழங்குகிறது.

**4. எந்த மத்திய அமைச்சர், பெட்ரோலியம் மற்றும் எரிவாயு தொடர்பான கேள்விகளுக்கு "MoPNG e Seva" எனும் ஒருங்கிணைந்த குறைநிவர்த்தி தளத்தை அறிமுகம் செய்து வைத்தார் ?**

A. பாக்கன் சிங் குலஸ்தே
B. அஜய் தம்தா
C. அர்ஜுன் ராம் மெக்வால்
D. தர்மேந்திரா பிரதான்

**விடை: D. தர்மேந்திரா பிரதான்**

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுக்கான மத்திய இணை அமைச்சர் (I/C) தர்மேந்திரா பிரதான், எண்ணெய் மற்றும் எரிவாயு துறை தொடர்பான அனைத்து கேள்விகள் மற்றும் குறைகளுக்கும் சமூக ஊடகங்களில் பதிலளிக்க "MoPNG e Seva" எனும் ஒருங்கிணைந்த குறைநிவர்த்தி தளத்தை அறிமுகம் செய்து வைத்தார். அனைத்து வாடிக்கையாளர்களும் சமூக ஊடகம் மூலம் எண்ணெய் மற்றும் எரிவாயு துறை தொடர்பான குறைகள் மற்றும் கருத்துக்களை ஒரே இடத்தில் அரசாங்கத்திற்கு சென்றடைய செய்யும் இடைமுகமாக இந்த தளம் இருக்கும். இது வாடிக்கையாளர்களுக்கு 24x7 சேவையினை வழங்கும்.

**5. கேன் வனவிலங்கு சரணாலயம் (Kane Wildlife Sanctuary), இந்தியாவின் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது ?**

A. அருணாச்சலப் பிரதேசம்
B. அசாம்
C. ஆந்திரப் பிரதேசம்
D. மணிப்பூர்

**விடை: A. அருணாச்சலப் பிரதேசம்**

கேன் வனவிலங்கு சரணாலயம் (KWS), அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் மேற்கு சியாங் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது, 55 சதுர கி.மீ பரப்பளவிற்கு பரந்துள்ளது மற்றும் இந்த பகுதிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை கவரும் பிரபலமான தளங்களில் ஒன்றாகும். இது பல்வேறு

மற்றும் அரியவகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் தாயகமாக அமைந்துள்ளது.

**6. உலக வங்கி, சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்த உத்தரகாண்ட் மாநிலத்துடன் (WB) எவ்வளவு கடன் தொகைக்கு ஒப்பந்தம் செய்துள்ளது ?**

A. $ 100 மில்லியன்
B. $ 200 மில்லியன்
C. $ 300 மில்லியன்
D. $ 250 மில்லியன்

**விடை: A. $ 100 மில்லியன்**

மாநிலத்தின் அனைத்து 13 மாவட்டங்களிலும் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்த உத்தரகாண்ட் மாநிலம் மற்றும் இந்திய அரசாங்கம் புது தில்லியில் உலக வங்கியுடன் (WB) $ 100 மில்லியன் கடன் ஒப்பந்தம் செய்துள்ளது. கடன் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், தனியார் சுகாதார சேவை வழங்குநர்களின் புதுமையான முயற்சிகளுக்கு நிதி அளிப்பதாகும். மேலும் இத்திட்டம் குடிமக்களுக்கு நிதி அபாயத்தை குறைத்து, அனைவருக்கும் மலிவான மற்றும் தரமான சுகாதார சேவை கிடைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

**7. சமீபத்தில் மறைந்த அசோகமித்திரன், எந்த மொழியின் குறிப்பிடத்தக்க இலக்கிய எழுத்தாளர் ஆவார் ?**

A. ஒடியா
B. தெலுங்கு
C. மலையாளம்
D. தமிழ்

**விடை: D. தமிழ்**

அனைவராலும் 'அசோகமித்திரன்' என்று அழைக்கப்படும் நன்கு அறியப்பட்ட தமிழ் நாவலாசிரியர் மற்றும் கட்டுரையாளர் தியாகராஜன் (85), சமீபத்தில் தமிழ்நாட்டின் சென்னையில் காலமானார். அவர் தனது நுட்ப நுணுக்கம்

மற்றும் புத்துணர்ச்சி படைப்பாற்றல் மிகுந்த வெளிப்பாடு மூலம் புகழ்பெற்றார். "அப்பாவின் சிநேகிதர்கள்" என்னும் இவரது சிறுகதை தொகுப்பு, 1996 ஆம் ஆண்டு இவரை சாகித்ய அகாடமி விருது பெறச் செய்தது. இவரது பணிகளில் 200-க்கும் மேற்பட்ட சிறுகதைகள், எட்டு நாவல்கள், உரைநடை தவிர வேறு சில 15 நாவல்கள் ஆகியவை அடங்கும். “The Eighteenth Parallel” என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட இவரது "18-வது அட்சக்கோடு" எனும் நாவல், அவரின் மிகவும் பாராட்டப்பட்ட நாவல்களுள் ஒன்றாகும். இவரின் பல்வேறு படைப்புகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**8. 2017 உலக வானிலை ஆய்வு தினத்தின்(World Meteorological Day) மையக்கரு என்ன ?**

A. Understanding cloud

B. Meteorology and tourism

C. World Weather Watch

D. Weather, oceans and human activity

**விடை: A. Understanding cloud**

பிரத்தியேகமாக வானிலை ஆய்வில் நிபுணத்துவம் வாய்ந்த ஐக்கிய நாடுகள் அமைப்பை நிறுவியதை குறிக்க மார்ச் 23-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலக வானிலை ஆய்வு தினம் அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டின் மையக்கருவான “Understanding Clouds” என்பது வானிலை காலநிலை(Weather climate) மற்றும் மழையை அறிந்து கொள்ள உதவும் மேகங்களின் மகத்தான முக்கியத்துவத்தை உயர்திக்காட்டுகிறது. முன்னறிவிப்புகள் மற்றும் வானிலை அவதானிப்பில்(weather observations) மேகங்கள் மையமாக இருக்கின்றது, நீர் சுழற்சியில் ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது மற்றும் நீர் வளங்களின் உலக விநியோகத்தை வடிவமைக்கிறது.

**9. எந்த உயர் மட்ட குழு, இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் (CCIM) மற்றும் ஹோமியோபதி மத்திய கவுன்சில் (CCH) எவ்வாறு பணியாற்றுகிறது என்பதை ஆய்வு செய்ய உருவாக்கப்பட்டுள்ளது ?**

A. நரேந்திர மோடி குழு

B. சசி தரூர் குழு
C. மதுகர் குப்தா குழு
D. அரவிந்த் பனகாரியா குழு

**விடை: D. அரவிந்த் பனகாரியா குழு**

அரவிந்த் பனகாரியா தலைமையிலான உயர் மட்ட குழு, ஒழுங்குமுறை அமைப்புகளான இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் (CCIM) மற்றும் ஹோமியோபதி மத்திய கவுன்சில் (CCH) எவ்வாறு பணியாற்றுகிறது மற்றும் அவர்களது ஆட்சி சட்டத்தை ஆராயயும் உருவாக்கப்பட்டுள்ளது. பனகாரியா நிதி அயோக்கின் துணை தலைவராக உள்ளார்.

**10. எந்த மாநில அரசு, கல்வி நிறுவனங்களில் இலவச WiFi வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளது ?**

A. அரியானா
B. உத்தரப் பிரதேசம்
C. பீகார்
D. ராஜஸ்தான்

**விடை: C. பீகார்**

பீகார் அரசாங்கம், சமீபத்தில் பீகார் திவாஸ் விழாவில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இலவச WiFi வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ஓர் இலட்சியப் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல மற்றும் ஸ்மார்ட் டிஜிட்டலாக மாற அவர்களுக்கு உதவும் வகையில் இலவச Wi-Fi வசதி வழங்குவதே திட்டத்தின் நோக்கம். பீகார் திவாஸ்(அல்லது பீகார் ஸ்தாபன திவாஸ்) என்றழைக்கப்படும் பீகார் அடித்தள நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளில் 1912 ஆம் ஆண்டு வங்காள பிரெசிடென்சியில் இருந்து பீகார் மாநிலத்தை பிரிட்டிஷ் பிரித்தெடுத்தது.